பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 25 ஜு: ஆண்டு 21 இதழ் 82
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 4-5-78

RECEIVED 16-5-04 PERIODICALS DIVISION ... LIBRARY

# நாடு பூராவும் ஒரேவித பஸ் கட்டணம்

## பண்டிதர் பிரேரணை சபை அங்கீகாரம்

(கொழும்பு)

நாடுமுழுவதும் பஸ்கட்டணம் ஒரே சீராக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டு ஊர்காவற்றுறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் கொண்டு வந்த தனிநபர் பிரேரணையை நேற்று தேசிய அரசுப்பேரவை ஏற்றுக்கொண்டது.

இந்தத்திட்டம் பரிசீலனையின் பின்னர் 3 மாத காலத்தில் நாடுமுழுவதும் செயல்படுத்தப்படும்.

தமது பிரேரணை மீது திரு. இரத்தினம் பேசும்போது கொழும்பு போன்ற நகரங்களில் குறிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு மாஸ்கோவில் இருப்பதுபோல் ஒரேவித கட்டணம் அமுல்படுத்தப்படவேண்டும் என்று வற்புறுத்தினர்.

---

### தமிழ்ஈழப் புலிகளுக்கும் கூட்டணிக்கும் தொடர்பா?

# அரசு எம். பி. க்களுடன் அமிர் கடுமையான வாக்கு வாதம்!

## குற்றச்சாட்டுக்கு சூடாகவே பதிலளித்தார்

### பிரதமர் பிரேமாவும் ஏற்றுக்கொண்டார்

(க. மகாலிங்கசிவம்)

**'ஒரு கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் 'நாங்கள் புலிகள்' என்று கூறியிருக்கிறர். முருங்கனில் துப்பறியும் பொலிசாரையும், பொத்துவில் 2வது எம். பி. கனகரத்தினத்தையும் சுட்டவர்கள் என்று கூறுகிறவர்களும் தங்களை 'தமிழ் ஈழப் புலிகள்' என்று குறிப்பிட்டிருக்கிறர்கள். இதில் இருந்து தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் இந்த இயக்கத்துக்கும் தொடர்பு இருப்பதாகவே நம்பப்படுகின்றது. எனவே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பயங்கரவாத சம்பவங்களைக் கண்டித்து அறிக்கை விடவேண்டும்.'**

இவ்வாறு தேசிய அரசுப் பேரவையில் இரு அரசாங்க தரப்பு உறுப்பினர்கள் ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவந்தனர். இதனால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது. கூச்சலும் குழப்பமும் நிலவியது. இவைகளுக்கிடையில் எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், இக்கொலை தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி அறிக்கை வெளியிட்டதா? சுதந்திரக் கட்சி அறிக்கை வெளியிட்டதா? ஏன் கூட்டணி மாத்திரம் அறிக்கை வெளியிடவேண்டும். நாட்டில் எத்தனையோ கொலைகள் நடைபெறுகின்றன. அவைகளைப்பற்றியெல்லாம் அறிக்கை வெளியிட்டுக்கொண்டிருப்பதுதான் அரசியல் கட்சிகளின் வேலையா? என்று கேட்டார் "இக்கொலையைச் செய்தவர் இவர்தான் என்று உங்களால்குறிப்பிட்டு நிரூபிக்க முடியுமா? நான் இதை ஒரு சவாலாகவே விடுக்கிறேன்' என்றார்.

*அரசாங்க தரப்பு பின்ஆசன உறுப்பினர்களின் கூச்சலுக்கிடையில் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஆக்ரோஷத்துடன் திரு. அமிர்தலிங்கம் தனது பேச்சை பேசி முடித்தார்.*

*இதையடுத்து அரசாங்க தரப்பில் பதிலளித்த பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவர் கூறிய அனைத்தையும் ஏற்றுக்கொண்டார். அவர் பேச்சில் சந்தேகத்துக்கிடமில்லை என்றும் தெரிவித்தார்.*

*இந்த விவாதம் சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.*

சபை ஒத்திவைப்பின்போது வியலுவ தொகுதி உறுப்பினர் திரு. வீரவன்னி சமரவீர, மகரகம தொகுதி உறுப்பினர் திரு. பிரேமரத்ன குணசேகர ஆகியோர் கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணைகள் சபையில் பரபரப்பைத் தோற்றுவித்தன.

திரு. அமிர்தலிங்கம் தாங்கள் புலிகள் என்றும், தமிழ் ஈழத்தை வென்றே தீருவோம் என்றும் கூட்டமொன்றில் பேசியிருப்பதாக பொலிஸ்காரர் ஒருவர் தம்மிடம் கூறியதாகவும், அண்மையில் பத்திரிகை யொன்றில் வெளியிடப்பட்ட "போட்டோஸ்ராட்" கடிதம் ஒன்றின்படி முருங்கனில் துப்பறியும் பொலிசாரையும் மற்றும் சாரதியையும் கொலைசெய்ததுடன் பொத்துவில்இரண்டாவது உறுப்பினர் திரு எம். கனகரத்தினத்தின் கொலைக்கு முயற்சித்தவர்களும் 'தமிழ்ஈழ விடுதலைப் புலிகள்என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் எனவே கூட்டணிக்கும் இவ்வியக்கத்துக்கும் தொடர்பிருப்பதாகவே நம்பப்படுவதாகவும் இப்பயங்கரவாத சம்பவங்களை கண்டித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கைவிடவேண்டும் என்றும் திரு. குணசேகர குறிப்பிட்டார்.

**பொத்துவில் கனகர்**

பொத்துவில் இரண்டாவது உறுப்பினர் திரு கனகரத்தினம் கூட்டணியிலிருந்து ஐ. தே. க.வுக்கு கட்சி மாறிய போது திரு. அமிர்தலிங்கம் அவரைத் 'துரோகி' என்று அழைத்தாரென்றும், அடுத்த சில வாரங்களிலேயே திரு. கனகரத்தினம்மீது கொலைமுயற்சி மேற்கொள்ளப்பட்டதென்றும் திரு. குணசேகரா மேலும்குறிப்பிட்டார்.

திரு சமரவீராவும் இதே கருத்தையே வெளியிட்டார்.

இச்சமயங்களில் சபையில் பலதடவைகளில் கூச்சல்கள் எழுந்தன.

**அமிர் அளித்த பதில்**

உறுப்பினர் இருவரினதும் பிரேரணைகளுக்கு சபையில். எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் பதிலளித்தார்.

சபையில் எழுந்தவண்ணமிருந்த பலத்த கூச்சல்களுக்கும் குறுக்கீடுகளுக்குமிடையே திரு. அமிர்தலிங்கம் மிக உரத்த தொனியில் வெகு ஆக்ரோஷத்துடனும் நிதானத்துடனும் உரை நிகழ்த்திக்கொண்டிருந்தார்.

சபையில் பரபரப்பான நிலைமை ஏற்பட்டது அரசாங்க உறுப்பினர்களும், கூட்டணி உறுப்பினர்களும் உணர்ச்சிவசப்பட்டவர்களாக சொற்போர் தொடுத்துக் கொண்டிருந்தபோது சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அமைதியாகவிருந்தார்கள்.

**சபை வரலாற்றில் புதுமை**

திரு. அமிர்தலிங்கம் தனது பதிலை ஆரம்பிக்கும்போதே இன்று இச்சபையில் வரலாற்றிலேயே புதுமையான ஒரு சம்பவம் நிகழ்கிறது. முதன் முறையாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரிடம் இச்சபையில் வினா ஒன்று வினவப்படுகிறது என்றார்.

அறிக்கை ஒன்றை விடும்படி தம்மைக்கேட்கிறீர்கள் என்றும் ஆனல் எந்த ஒரு உறுப்பினராவது இன்னோர் உறுப்பினரை அறிக்கை விடும்படி கூற இச்சபையில் உரிமைஇருப்பதாக தான் கருதவில்லை என்றும் கூறினார்.

அப்போது அரசாங்க உறுப்பினர்கள் பலர் 'தலைவர் என்ற ரீதியிலேயே கேட்கிறோம்' என்று கூச்சலிட்டார்கள்.

எதுவும் கூற இயலாதவர் கள் சத்தமிடுவது வழக்கமானதே அவர்களது தலைகளுள் ஒன்றுமில்லாமையைத் தான் அது தெளிவாக்காட்டும். எனது மதிப்புக்குரிய நண்பர்கள் எவ்வளவுதான் இங்கு சத்தமிட்டாலும் அவற்றால் நான் பயப்படவோ மிரளவோ போவதில்லை. அவற்றல் என்னைக் குளப்பிவிடவும் முடியாது என்றார் திரு. அமிர்தலிங்கம்

(6-ம் பக்கம் பார்க்க)

---

# புதிய ஜி. ஏ. இன்று பதவி ஏற்பு

(வண்ணார்பண்ணை)

யாழ் மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபர் திரு. எம். ஈ. என். பெர்ணாண்டோ இன்று உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கிறார்.

பொதுநிர்வாக உள்நாட்டமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகக் கடமையாற்றிய இவர் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

நேற்றுவரை அரசாங்க அதிபராக இருந்த திரு. ஏ. ஏ. யோசேப் கடமையிலீடுபட்டிருந்தார்.

புதிய அரசாங்க அதிபராகப் பதவியேற்கும் திரு. எம். ஈ. என் பெர்ணாண்டோ பீ. ஏ. பட்டதாரியானதும் 1960ல் அரசசேவையில் சேர்ந்தவர்.

ஆற்றுநீர்ப் பள்ளத்தாக்கு ஆளணி முகாமையாளராகவும்

(6-ம் பக்கம் பார்க்க)

---

### 1 லட்சத்து 40,000 ரூபா மோசடியாம்

# மனேஜர், லிகிதருக்கு இன்றுவரை றிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட இருவரை இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா மோசடி நடைபெற்றுள்ளதாம்.

யாழ் உதவிக் கூட்டுறவு ஆணையாளரினல் யாழ்.பொலிஸில் செய்யப்பட்ட புகாரை அடுத்து யாழ். பொலிஸ் விசேஷ குற்றபுலன்விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு இ அப்பையா இதுபற்றி விசாரணை செய்தார்.

விசாரணையின்போது சந்தேகத்தின்பேரில் சங்க முகாமையாளரான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் ரகுநாதனும், கணக்கு லிகிதர் கருநகரைச் சேர்ந்த பெருமாள் டோம்பினிக் மரியநாயகம் ஆகியோர் யாழ் விசேஷகுற்றபுலன்விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி திரு. இ. அப்பையாவால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்ற நீதவான் திரு. கே. வி. நவரத்தினத்தின் முன் ஆஜர்செய்யப்பட்டபோது சந்தேக நபர்களை இன்றுவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சார்ஜண்ட் திரு. அப்பையா தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளார். (கா-உ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

"வைத்தியர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் உகந்த சுத்தமான நல்லெண்ணெய் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் கிடைக்கும். தொடர்புகொள்ளவும்' ராதா ஒயில் மில், 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9182

குறுகிய காலத்தில் அதிக பயன் தரக்கூடிய நல்ல இன செவ்விளநீர்க்கன்றுகள் விற்பனைக்குண்டு. மில்க்வைற் யாழ்ப்பாணம். 9210

### தேவை

கீழ்க்காணும் முகவரியிலுள்ள புதிய ஹோட்டலுக்கு திறமையும், அனுபவமுமுள்ள பிணைப்பணம் கட்டக்கூடிய காசாளர் ஒருவர் தேவை. காந்த் ஹோட்டல், 74/1 கஸ்தூரியார் வீதி. (ராஜாதியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம் 9206

**I. C. M. A.**

Foundation - Section A
Financial Accounting FAI
May 75 to Nov. 77 &
Pilot paper
Seven Question papers
and suggested answers
by
A. Somasundarampillai
B. A. F. C. A.
Rs 25/-
Chartered Accountant
91½ (95) Stanley Road, Jaffna.
Percival Hall, Jaffna.
9172

## கேள்வி விளம்பரம்

### முள்ளிப்பற்றுக் கிராமப்பகுதி இயக்கச்சி

பண்ணை மண்டலாய்வீதி

மேற்படி வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/க் மீளளிக்கப்படாத பத்திரப்பணமாக ரூபா 10/- செலுத்தியதன் பேரில் வழங்கப்படும் பத்திரத்தில் 31-05-78 காலை 11-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். 31-05-78 காலை 10-30க்குப் பின்னர் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

மேலதிக விபரங் காரியாலய நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சி. அம்பலவாணர்,
விசேட ஆணையாளர்,
முள்ளிப்பற்றுக் கிராமப்பகுதி,
இயக்கச்சி.

9207

## நிர்வாகிகள்

(வேலணை)

வேலணை கல்விவட்டார நிர்வாகிகளாக பின்வருவோர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைவர் பொன் கணேசன் உபதலைவர் ஆ. சிங்கராயர் செயலாளர் பொ. நடராசா தனதிகாரி பெ. பொன்னுச்சாமி மற்றும் 7 பேர்கள் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. [உ]

0 0 0

(அரியாலை)

யாழ்ப்பாணத் திருச்சபை சுவிசேஷ சங்கத்தின் 39 வது வருடாந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் கிறிஸ்துநாதர் ஆலய மண்டபத்தில் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு. யே. யே. ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகளாக தலைவராக யாழ்ப்பாண ஆர்ச்டீக்கனும், உப தலைவராக திரு. ஈ. டபிள்யூ. அழகரத்தினமும், செயலாளராக திரு. எஸ். பி. ஜீவானந்தமும், பொருளாளராக திரு. எம். இ. பிரான்சிசும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.



கிளிநொச்சியில் நடைபெற்ற விவசாய விழாவை கிளிநொச்சி எம் பி. திரு. வீ. ஆனந்தசங்கரி மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும் அவரருகே, கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. இராஜதுரை நிற்பதையும் படத்தில் காண்க.

# "ஆரம்பக்கல்வியின் போதே ஒழுக்கநெறி போதனை"

## வி. என். வலியுறுத்து

[கொடிகாமம்]

"மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியின்போதே ஒழுக்கநெறி வலியுறுத்தப்படவேண்டும்" என்று சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலய புதிய மண்டபத் திறப்புவிழாவில் பேசுகையில் கூறினார்.

திரு: ஆ. செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் "மாணவர்கள் ஒழுக்கசீலர்களாகத் திகழ்வதற்கு கல்வி மிக முக்கியமானது. மாணவர்கள் வாழ்வு உயர ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோரும் பாடுபட வேண்டும்" என்றார். [உ]



"இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள்" என்னும் விஷயம் பற்றிய கலந்துரையாடலில் வெளிவாரி சட்ட மாணவர்மன்றத் தலைவர் திரு. மா. குலேந்திரன் உரையாற்றுவதையும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காண்க.

படம்: பிரபா போட்டோ 'தேவா'

# கேள்வி அறிவித்தல்

## சுன்னாகம் பட்டணசபை

கீழ்க்காணும் வேலைகளுக்கான சில வைத்த கேள்விகள், என்னால் 1978-ம் ஆண்டு மே மாதம் 16-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள், 1-ம், 2-ம் வேலைகளுக்கு ரூ. 15,000/-க்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் 3-ம், 4-ம் வேலைகளுக்கு ரூ. 5,000/-க்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், அவ்வவ் வேலைகளுக்கெதிரே குறிப்பிட்டுள்ள கேள்விப்பத்திரப்பணமும், கேள்விப் பிணைப்பணமும் செலுத்தி மே மாதம் 15-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். மேற்கொண்டு விபரங்களை எனது காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விப் பிணைப்பணம் |
|---|---|---|
| 1. புகையிரத நிலைய கிழக்கு வீதி திருத்தி கற்களிட்டுத் தாருற்றுதல் | 20-00 | 200-00 |
| 2. கடவைப்புலம் ஒழுங்கைக்கு கற்களிட்டுத் தாருற்றுதல் | 20-00 | 200-00 |
| 3. 2-ம் வட்டாரம் தில்லகட்டி ஒழுங்கை திருத்தவேலையும் கற்களிட்டுத் தாருற்றுதலும் | 15-00 | 100-00 |
| 4. 7-ம் வட்டாரம் சோமராம் தோட்ட வீதி கற்களிட்டுத் தாருற்றுதல் | 15-00 | 100-00 |

விசேட ஆணையாளர்,
பட்டணசபை, சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம், 28-4-78.

9208

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் அரியாலை, கண்டி வீதி 197-ம் இலக்கத்தில் வசித்த முத்தையா மயில்வாகனம் என்பவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்து விடயமாக

மரணமெய்தியவர் மயில்வாகனம் கைம்பெண் ரோகினி அம்மா, 197, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். மனுதார்

மரணசாதன)
) இல. த/3362
நிர்வாகத்திக்க)

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென் புதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
வி. சி, பரமநாதன்,
பதிவாளர்.

1978-ம் ஆண்டு பங்குனி மாதம் 2 ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
தயாரித்தது:
சு. செ. மகாதேவா,
மனுதாரின் பதிவு பெற்ற தரணி.

9203

# மூவாயிரம் ரூபாவுடன் தலைமறைவானாராம்

## கைதாகியவர் பிணையில் விடுதலை

[யாழ்ப்பாணம்]

சீமெந்து வாங்கிவரப் பணம் பெற்றவர் சீமெந்துத்தொழிற்சாலையில் லொறியை விட்டுவிட்டுக் கம்பி நீட்டிவிட்டதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று காங்கேசன் துறை சீமெந்துத்தொழிற்சாலையில் நிகழ்ந்துள்ளது.

நல்லூர் கல்வியங்காட்டைச் சேர்ந்த இராசையா சிவபாலலிங்கம் என்பவர் தனது லொறியில் சாரதியாகப்பணிபுரியும் எஸ். நாகலிங்கம் அல்லது செல்லத்துரை என்பவரிடம் மூவாயிரம் ரூபாவைக் கொடுத்து காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து வாங்கிவர அனுப்பினாராம்.

பணத்துடன் சென்ற செல்லத்துரை லொறியைதொழிற்சாலையில் விட்டுவிட்டு தனது சொந்தஊரான கலஹாவிற்கு கம்பிநீட்டிவிட்டாராம்.

இது பற்றிப் பொலிசாருக்கு செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சந்தேகநபரைக் கலஹாப்பொலிசார் கைது செய்து பின்னர் யாழ். நீதவான் முன் ஆஜர் செய்தனர். சந்தேகநபரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் அடுத்த மாதம் 4ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளையிட்டார்.

சந்தேகநபரிடமிருந்து யாழ் விசேட புலனாய்வுப் பொறுப்பதிகாரி திரு. இ. அல்லையா 900ரூபாவைக் கைப்பற்றினார் என்று தெரிவிக்கப்பட்டது. [கா-உ]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## மரண அறிவித்தல்

### வயித்திலிங்கம் நடராசா

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திரு. வயித்திலிங்கம் நடராசா காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று 4-5-78 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இணுவிலில் நடைபெறும். உற்றாரும் உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் கொடுப்பவர்கள்
மனைவி, மக்கள்.

9204

## முதலாம் வகுப்பு

[5 வயதும் பின்னே]

பாட வழிகாட்டி

விலை ரூபா 2-50

கிடைக்குமிடம்

**செட்டியார் அச்சகம்,**

432, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.

9205

ஈழநாடு
The Eelanaadu

# ஈழத்து நூல்களை தமிழ்நாட்டில் கூட்டுமுறையில் வெளியிட்டாலென்ன?

## சிவபாதசுந்தரம் கேள்வி எழுப்புகிறார்

(வெள்ளவத்தை)

"இந்திய சஞ்சிகைகள் பிரசுரங்களின் இறக்குமதியால் ஈழத்து இலக்கியம் பாதிக்கப் படுகிறது என்கிறீர்கள். ஆனால் இதனை அரசியல் தலைவர்கள் மூலம் தீர்க்க முடியாது. அரசியல் ரீதியாக இலக்கிய விஷயத்தைத் தீர்க்க முடியாது. இது இரு நாட்டு இலக்கிய வாதிகளும் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டிய விஷயம்."

இவ்வாறு 'இந்திய சஞ்சிகைகள் பிரசுரங்கள் இறக்குமதியும் ஈழத்து இலக்கியத்தின் மீதான பாதிப்பும்' என்ற கருத்தரங்கில் தமிழறிஞர் திரு. சோ. சிவபாத சுந்தரம் குறிப்பிட்டார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகமும் இணைந்து கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடத்திய கருத்தரங்கிற்கு திரு. பிரேம்ஜி ஞானசுந்தரன் தலைமை வகித்தார்.

திரு. சிவபாதசுந்தரம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

'இங்குள்ளவர்கள் தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் பிரசுரங்களை, சஞ்சிகைகளை விரும்பிப் படிக்கிறீர்கள், சிலவற்றைக் குப்பை கூளங்கள் என்று வெறுத்து ஒதுக்குகிறீர்கள். ஆனால் இதைப்போலவே தமிழ் நாட்டிலும் இருக்கிறார்கள்.

"தரமானவற்றை விரும்பிப் படிப்பதும் தரமற்றவற்றை வெறுத்து ஒதுக்குவதும் நம்மிடையே காணப்படும் ஒரு பண்பு இங்கும் அங்கும் ஒரே நிலைதான். இது ஒரு பொதுப் பிரச்னை.

### இருவழிப்பாதையாக வேண்டும்

அங்கிருந்து இங்கு இறக்குமதியானதைப் போலவே இங்கிருந்தும் இலக்கியங்கள் பிரசுரங்கள் சஞ்சிகைகள் அங்கும் வரவழைக்கப்பட வேண்டும். இரு நாட்டுக்குமிடையே ஒரு கலாசார பரிவர்த்தனை ஏற்பட வேண்டும். ஒருவழிப்பாதை என்பதை மாற்றி இருவழிப் பாதையாக்க வேண்டும்.

"இந்திய சஞ்சிகைகளின் பிரச்னைகளுக்கு மூன்று வழிகளை நீங்கள் கையாளலாம் ஒன்று முற்றாகவே தடை செய்வது. இரண்டு, குறிப்பிட்ட அளவு இறக்குமதி செய்வது. மூன்று, இருவழிப் பாதையாக அரசாங்க ரீதியில் செயல்படுவது.

### இரவல் வாசகர் இங்கு அதிகம்

"இங்கு அறிஞர்கள், எழுத்தாளர்கள் அதிகமாகவே இருக்கிறார்கள். ஆனால் பணம் கொடுத்துப் பத்திரிகை சஞ்சிகைகளை வாங்கிப் படிப்பவர்கள் குறைவு. இரவல் வாங்கித்தான் படிக்கிறார்கள்.

இப்பொழுது இந்தியாவில் சொந்தத்தில் பத்திரிகை புத்தகங்கள் வாங்குபவர்கள் அதிகரித்து வருகிறார்கள். பரந்த சமுதாயத்தில் நாம் போட்டி போட்டு முன்னேற வேண்டும்.

கடந்த இருபது ஆண்டுகளாக ஈழத்தில் தரமான இலக்கிய விமர்சகர், எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்தியாவில் நிரூபித்தவன். இந்தியாவில் வெளிவந்த சரஸ்வதி என்ற சஞ்சிகை ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளியிட்டது மாத்திரமின்றி அவர்களின் உருவப் படங்களை அட்டைப்படமாக வெளியிட்டது.

### கூட்டுறவு முறையில் ஈழத்து நூல்களை இந்தியாவில் வெளியிட்டாலென்ன?

"இப்பொழுது இலங்கை, இந்திய கூட்டுத் தயாரிப்பாக தமிழ்ப் படங்களை உருவாக்குவது போல கூட்டுறவுமுறையில் இங்குள்ள எழுத்தாளர்களின் நூல்களை தமிழ் நாட்டில் வெளியிட்டால் என்ன?

ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்களை தமிழ் நாட்டில் வெளியிட என்னால் ஆன முயற்சி எடுப்பேன். அத்துடன் அங்கு எடுத்துச் சொல்வேன்.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக்ஜீவா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இந்திய சஞ்சிகைகளுக்கு எதிராக 1969-ம் ஆண்டு குரல் கொடுத்தது. கடந்த ஏழு ஆண்டுகளாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்த சஞ்சிகைகள் இன்று மலைபோல வந்து குவிகின்றன. இதனால் எதிர்கால இலக்கிய சந்ததிகள் பாதிக்கப்படுவார்கள்.

இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதியால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்திடம் நேரில் சந்தித்து விளக்கமாக எடுத்துக் கூறினேன். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. திருநாவுக்கரசிடமும் எடுத்துச் சொன்னேன் அவர் இதுபற்றி ஆட்சிமன்றத்தில் குரல் எழுப்புவதாகச் சொன்னார். சொல்லி நாலு மாதங்களாகிவிட்டன.

### இந்திய அரசு மறுக்கிறது

இலங்கை இலக்கியங்களை, சஞ்சிகைகளை இந்தியத்தமிழர்கள் வாங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இந்திய அரசு அதற்கு அனுமதி வழங்க மறுக்கிறது. கச்சதீவுப்பிரச்னையைத் தீர்த்த இந்திய அரசுக்கு இந்த கலாசாரப்பிரச்னையைத் தீர்ப்பது கஷ்டமல்ல.

இந்திய தமிழ் எழுத்தாளர்களிடம் இதயநேர்மை கிடையாது. நாவலரைத் தெரியாது என்று சொன்ன 'மணியன்' இதயம் பேசுகிறது இதழில் இதய நேர்மையற்ற முறையில் எழுதுகிறார்".

மற்றும் இளங்கீரன், மா. பாலமணி, கே. எஸ். பாலச்சந்திரன் ஆகியோர் கருத்துத் தெரிவித்தார்கள். (அ)

# "இந்திய எழுத்தாளர்கள் வருமானவரி கட்டுகிறார்கள்"

(வெள்ளவத்தை)

"தமிழ் நாட்டில் எழுத்து ஒருமிகப் பெரிய வியாபாரமாக நடந்து கொண்டிருக்கிறது. எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒரு பக்கக் கட்டுரைக்கு ரூபா 500 வாங்குகிறார் மாதத்திற்கு 3000 ரூபாய் எழுதியே சம்பாதிக்கிறார். அவரது எழுத்துக்கு வாசகர்களிடையே ஒரு கௌரவம் உண்டு.

இவ்வாறு தமிழறிஞரும் எழுத்தாளரும் முன்னாள் இலங்கைவானொலி தமிழ் ஒலிபரப்பு அதிகாரியுமான திரு. சோ. சிவபாதசுந்தரம் ஈழத்து எழுத்தாளர்களின் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஜெயகாந்தனுக்கு அடுத்தபடியாக எழுதிச்சம்பாதிப்பவர் கவிஞர் கண்ணதாசன் பாடல்கள் மூலம் அதிகமாக சம்பாதித்தவர் இப்பொழுது எழுதியே சம்பாதிக்கிறார். மாதம் ஒரு நூலையும் சஞ்சிகையையும் வெளியிடுகிறார்.

"தீபம்" நா. பார்த்தசாரதி உற்சாகமாக எழுதுகிறார் எழுத்து வருமானத்தை விட மேடையில் பேசியே அதிகமாகச் சம்பாதிக்கிறார் பேசிக் கிடைக்கும் வருமானத்தை தீபத்திற்குச் செலவிடுகின்றார்.

எழுத்தாளர் சாண்டில்யன் சரித்திரக்கதைகள் மூலம் வாரம் ரூபா 250 சம்பாதித்தார். அவருடைய புதிய சமூக நாவல் அவருக்குக் கைகொடுக்கவில்லை. அதே கற்பனை என்று வாசகர்கள் ஒதுக்கி விட்டார்கள்.

எழுத்தாளர் அகிலனுடைய மார்க்கட் சரிந்துவிட்டது. தொடர்கதைகளை எழுதி அதிகமான வாசகர்களைத் தேடிய அவர் இப்பொழுது அதிகமாக எழுதுவதில்லை ஒரு லட்ச ரூபாய் ஞானபீடப் பரிசு பெற்றுச் சுகமாக வாழ்கிறார்.

'இதயம்பேசுகிறது' மணியனைத் தரமான இலக்கிய வட்டம் எழுத்தாளராகவோ இலட்சியவாதியாகவோ ஒப்புக்கொள்ளைதில்லை

எழுத்தாளர்களின் நாவல்கள் ஒரு பதிப்பு இரண்டாயிரம் பிரதிகளுக்கு மேல் அச்சிடுவதில்லை. ஆனால் பல பதிப்புகள் வெளிவரும் எழுத்தாளர் தாங்கள் பெறும் சன்மானத்திற்குப் பத்து ரூபாயாக இருந்தாலும்சரி வருமானவரி கட்டியாக வேண்டும்

பல புதிய பிரசுரகர்த்தாக்கள் உருவாகிவருகிறார்கள். எழுத்தாளர்களுக்குப் போதியளவு சன்மானம் தருகிறார்கள். புதிய எழுத்தாளர்களின் படைப்புக்களைத் துணிந்து வெளியிடுகிறார்கள்".

இவ்வாறு திரு சிவாதசுந்தரம் கருத்துத் தெரிவித்தார்.

## கேரதீவு-சங்குப்பிட்டி பாதை

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்குச் செல்வதற்கு இரண்டு பாதைகள் இருக்கின்றன.

கேரதீவு சங்குப்பிட்டிப் பாதை ஒன்று; வவுனியா மார்க்கம் மற்றது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை எழுபது மைல் தூரம். வவுனியா மார்க்கம் இதைவிட இரட்டிப்பு.

கேரதீவு சங்குப்பிட்டிப் பாதையால் செல்வதால் மிகக்குறைந்த நேரத்தில் பிரயாணக் களைப்புமில்லாமல் சென்றுவிடலாம்.

மன்னார் மாவட்டத்தில் வேலைபார்க்கும் பலரும் மற்றும் பொதுமக்களும் பெரும்பாலும் கேரதீவு சங்குப்பிட்டிப் பாதையால் போக்குவரத்துச் செய்வதையே விரும்புகிறார்கள்.

ஆனால் ஒரு மைல் நீளமான சங்குப்பிட்டிக் கடலைக் கடப்பதில் உள்ள ஆபத்து எந்த நேரம் அந்தக் கடலுக்கும் பலியாக வேண்டி ஏற்படுமோ என்ற அச்சத்தைக் கொடுக்கிறது.

சில வாரங்களுக்கு முன் சங்குப்பிட்டித் துறையில் இருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு காலையில் புறப்பட்ட சிறிய படகு புறப்பட்ட சிறிது தூரத்தில் கவிழ்ந்துவிட்டது. குழந்தைகள் பெண்கள் உட்படப் பிரயாணிகள் அனைவரும் தத்தளித்தனர். படகில் இடம் கிடைக்காமல் கரையில் நின்றவர்கள் விரைந்து உதவிசெய்து உயிரைக் காப்பாற்றினர். நல்லகாலமாக உயிர்ப்பலி எதுவும் சம்பவிக்கவில்லை.

பிரயாணிகள் பலரும் பெரும் அவதிக்குள்ளானார்கள். பணத்தையும் பொருள்களையும் இழந்தனர்.

கேரதீவு சங்குப்பிட்டிக் கடலில் ஆயச்சேவை நடத்தும் கட்டுறவுச் சங்கம் பிரயாணிகளிடமிருந்து பணம் வசூலிப்பதில் காட்டும் அக்கறை அவர்களை ஆபத்தில்லாமல் கரைசேர்ப்பதற்கு நல்லமுறையில் படகுச்சேவை நடத்துவதில் கவனம்செலுத்தாமல் இருப்பது ஏனோ?

ஒரு மைல் நீளக் கடலைத் தாண்டுவதில் இக்காலத்தில் இவ்வளவு கஷ்டமிருப்பது யாருக்கும் பெருமையளிக்க முடியாது.

இக் கடலில் பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று பேரவையிலும் வெளியிலும்சிலகாலத்துக்கு முன் குரல் எழுப்பப்பட்டது.

இப்போது அந்தப் பேச்சையே காணோம். பெரும் ஆழ்கடலுக்கு நடுவேயே வீதி போடப்படும் காலம்இது இந்த ஒரு மைல் நீளக்கடலில் பாலம்போடுவது நடக்க முடியாத விஷயமல்ல.

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதையால் பிரயாணம்செய்வோரிலுள்ள கஷ்டங்கள் பற்றிப் பலரும் பலதடவைகளிலும் எடுத்துக்கூறியும் இன்னும் இதற்கு விமோசனம் கிடைக்கவில்லை.

போக்குவரத்துப் பாதைகள் சீராக இருந்தால்தான் நாடு முன்னேறமுடியுமென்பதை மறந்துவிடக்கூடாது நெடுஞ்சாலைகள் திணைக்களம் கேரதீவு சங்குப்பிட்டிப் பாதையில் சிறந்தவாவது கவனம் செலுத்தவதற்கு நமது பிரதிநிதிகள் வற்புறுத்துவது அவசியம்

## கல்வி அமைச்சு தீர்மானம்

(நெல்லியடி)

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் 5ம் வகுப்பு வரையுமே நடாத்த கல்வி அமைச்சு இறுதியாக தீர்மானித்துள்ளது.

இதுவரைகாலமும் இப் பாடசாலையில் 6ம் வகுப்பு வரை நடைபெற்றுவந்தது. ஆரம்பத்தில் 8வது வகுப்பு வரையும் இப்பாடசாலையில் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வந்தன. பெற்றோரில் குறிப்பிடத்தக்க தொகையினர் 5வது வகுப்புவரை நடைபெறுவதை ஆதரித்துள்ளனர். (உ)

## குப்பிழான் கி. அ. சபை

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் கிராம அபிவிருத்திச்சங்க வருடாந்தக் கூட்டம் டாக்டர் எஸ். செல்வநாயகம் தலைமையில் மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. செ. துரைசிங்கம், துணைத்தலைவர்: திரு. க. பொ. நடனசிகாமணி, செயலாளர்: திரு. த. தர்மலிங்கம், துணைச்செயலாளர்: திரு. வ. சிவபாதம், பொருளாளர்: திரு. க. சுப்பிரமணியம், கணக்குப் பரிசோதகர்: திரு. கா. நல்லையா. [உ]

### மணிவாக்கு

ஒரு மனிதனின் கௌரவம் அவனது நாக்கு நுனியில்தான் உள்ளது

— பாரசீகப் பொன்மொழி

## மகாஜனக் கல்லூரியில்

# ஜெயரத்தினம் உருவச்சிலை 6-ம் திகதி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வைரவிழா நினைவு நிலையம், ஸ்ரீ ஸ்ரீ. ஜெயரத்தினம் உருவச்சிலை எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் திறந்து வைக்கப்படவிருக்கின்றன

கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவார். பிரதம விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் ஆகியோர் கலந்து கொள்வார். (உ)

## நீர்வேலியில் தேவாரப்பண் இசைவகுப்பு

(நீர்வேலி)

நீர்வேலி இந்துசமய அபிவிருத்திச்சபையின் ஆதரவில் கடந்த 2-ம் திகதி செவ்வாய்க்கிழமை நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் தேவாரப்பண்ணிசை வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது

பிரபல ஸ்ரீ சு இராசேந்திரக்குருக்கள் தலைமையில் நடைபெற்று இவ்வைபவத்

[5ம் பக்கம் பார்க்க]

# ரஷ்ய - பிரிட்டிஷ் உறவில் நெருக்கடி!

## பிரி. தளபதி உரையினால் எழுந்துள்ள பிரச்னை

### சீனாவில் ரஷ்யாவைக் கண்டித்தாராம்

லண்டன், மே. 3

பிரிட்டனுக்கும் சீனாவுக்கும் பொதுஎதிரியாக சோவியத் யூனியன் உள்ளது என்று பிரிட்டிஷ் ஆயுதப்படைத் தளபதி சீனாவில் நிகழ்த்திய பேச்சுக்களினால் பிரிட்டிஷ்-ரஷ்ய உறவுகள் பாதிப்படையலாம் என்று கருதப்படுகிறது.

சீனாவில் வைத்து இவ்வாறு பொறுப்பற்றவிதமாக ரஷ்யாவைத் தாக்கிப்பேசிய பிரிட்டிஷ் ஆயுதப்படைத் தளபதி திரு. நீல் கெமரோனை பதவியிலிருந்து வெளியேற்றவேண்டுமென எழுந்துள்ள கோரிக்கையை பிரிட்டிஷ் அரசு பொருட்படுத்தவில்லையென்று பிரிட்டிஷ் செய்திகள் தெரிவிக்கின்றன!

திரு. நீலின் பேச்சுக் குறித்து பிரிட்டிஷ்பிரதமர்திரு ஜேம்ஸ் கலகன் ஆட்சிமன்றத்தில்கருத்துத் தெரிவிக்கையில் திரு. நீல் தமது பேச்சின்போது இல சொற்களை மாற்றிக்கூறியிருக்கலாம். சாதாரணமாகக்கூறியது ஆளும் கட்சிக்குள்ளேயே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளதாக பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**'பிராவ்தா' கருத்து**

''ஆயுதப்படைத் தளபதியின் பொறுப்பற்ற இக்கூற்றினால் ரஷ்ய-பிரிட்டிஷ் உறவு எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் எனக் கூறமுடியாத நிலையில் உள்ளது என்று ரஷ்யப் பத்திரிகையான 'பிராவ்தா' கருத்து வெளியிட்டுள்ளது.

# வாலிபர்களிடம் பணம் பெற்று மோசடியாம்

## ஒருவரை பொலிஸ் தேடுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டிலுள்ள வாலிபர்களுக்கு மத்திய கிழக்கில் வேலைபெற்றுத்தருவதாக ஏமாற்றி பணம் பெற்றதாகக் கூறப்படும் வாலிபர் ஒருவரைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ராஜா என்ற இந்த வாலிபர் ஒரு காரியாலயத்தை நிறுவி யாழ் குடாநாட்டிலுள்ள படித்த வாலிபர்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளில் வேலைபெற்றுத் தருவதாகக்கூறி பணம் பெற்றுக் கொண்டாராம்.

ஒவ்வொரு இளைஞரிடமும் 250 ரூபாவிலிருந்து 2000 ரூபாவரையில் பெற்ற பணத்தை மோசடி செய்தாராம். யாழ். விசேஷ குற்றப்புலன்விசாரணைப் பொறுப்பதிகாரி திரு இ. அப்பையா, தலைமறைவாகியுள்ள சந்தேக நபரைத்தேடி வலைவிரித்துள்ளார்.

[கா-உ.]

# 'ஷா' கமிஷனுக்கு பலத்த பாதுகாப்பு

## வெள்ளி பெங்களூரில் விசாரணை

புதுடில்லி, மே. 3

இந்தியாவில் நெருக்கடிநிலை அமுலிலிருந்தபோது இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறிய செயல்கள் குறித்து விசாரணை செய்துவரும் ஷா கமிஷன் பெங்களூரில் விசாரணையை ஆரம்பிக்கும் போது கமிஷனுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்படுமென்று பொலிஸ் உயர் அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

இம்மாதம் 5ம் திகதி கமிஷன் பெங்களூரில் விசாரணையை ஆரம்பிக்கும்.

அண்மையில் புதுடில்லியில் ஷா கமிஷன் இறுதிநாள்விசாரணையின் போது இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தையும், கமிஷனரைச் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியையும் அடுத்தே இப்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(இ)

# ஆஸ்பத்திரியில் செல்வக்குமார்

[மட்டக்களப்பு]

முருங்கனில் நடைபெற்ற இ. ஐ. டி. பொலிசாரின் கொலைச் சந்தேக நபர்களில் ஒருவரென கடந்த வாரம் மட்டுநகரில் கைது செய்யப்பட்ட (சுரேஸ்) செல்வக்குமார் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார். விடுதலை செய்யப்பட்டவுடன் மட்டுநகர் பெரியாஸ்பத்திரியில் அவர் வைத்திய சிகிச்சையின் பொருட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுரேஸ் குமார் அகிலஇலங்கை தேசிய இரமதான சங்கத்தின் பிரதம இணைப்பாளராக கடமையாற்றி வருகிறரென்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# ஆயிரக்கணக்கில் படுகொலை

காபூல், மே. 3

ஆப்கானிஸ்தானில் கடந்தவாரம் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டுள்ளனரென்று காபூல் செய்தியொன்று தெரிவிக்கிறது. [இ]

# ஆப். புதிய மந்திரிசபையில் 3 இராணுவ அதிகாரிகள்

## ரஷ்ய ஆதரவாளர்களே பலர்

காபூல், மே. 3

ஆப்கானிஸ்தான் புதிய ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி ஜனாப் நூர் முகம்மது டராகி 22பேர் அங்கம் வகிக்கும் அமைச்சரவை ஒன்றை அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற புரட்சியின் தலைவர் ஜெனரல் அப்துல் காதர் உட்பட மூன்று இராணுவ அதிகாரி

(5-ம் பக்கம் பார்க்க)

# சஞ்சயின் நண்பருடைய விமான நிலையத்துக்கு 'சீல்'

புதுடில்லி மே. 3

சஞ்சய் காந்தியின் நண்பர் திரேந்திர பிரமச்சாரிக்கு சொந்தமான விமான நிலையம் அதிகாரிகளால் மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஜம்முவிலிருந்து 100 மைல் தொலைவிலுள்ள, இந்தவிமான நிலையம் நெருக்கடிநிலை அமுலிலிருந்த காலத்தில் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆட்சேபனையையும் மீறி கட்டப்பட்டதாக விசாரணையின்போது தெரிய வந்தது. இதையடுத்து அது சீல் வைக்கப்பட்டது"

ஆச்சிரமம் நடாத்தும் சாமியாரான பிரமச்சாரிக்கு விமானம் வாங்குவதற்கு நிதி பெறவும் விமானத்தளம்கட்டுவதற்கான அனுமதியும் அரசினால் சட்டவிரோதமாக வழங்கப்பட்டது என்று கூறப்பட்டது. (கே-இ)

### இரண்டாம்தலைமுறையின்

# ஒரே தலைவர் கருணாநிதியே

## எம். ஆர். ராதா புகழாரம்

சென்னை, மே. 3

''நமது முதல் தலைமுறைதலைவர்களெல்லாம் நம்மைவிட்டு மறைந்துவிட்ட நிலையில் நம் இரண்டாம் தலைமுறையின் ஒரே தலைவராக விளங்குபவர் கலைஞர் கருணாநிதிதான்'' இவ்வாறு சென்னையில் நடைபெற்ற 'தூக்குமேடை' நாடக விழாவில் உரையாற்றிய நடிகவேள் எம் ஆர் ராதா குறிப்பிட்டார்.

இவ்விழா கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

விழாவில் நடிகவேள் எம். ஆர். ராதா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''நான் எந்தக்கட்சியையும் சேர்ந்தவனல்ல; எனக்கு அதிகம் சொந்தக்காரனும் கருணாநிதி மட்டுமல்ல, எம் ஜி. ஆரும் எனக்குச்சொந்தக்காரர்தான். நாங்கள் எல்லோரும் அப்படி இருந்தோம்; ஏதோ பிரிந்து போய் விட்டார்கள்; நான் இவர்களைக் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன்.

நீங்கள் எல்லோரும் ஒன்றானால் இந்த நாட்டில் வேறொரு கட்சிக்காரன் ஆட்சிக்கு வர முடியுமா? நீங்கள் பெரிய விரோதிகள் அல்ல.)

நம் நாட்டில் முதல் தலைமுறைத் தலைவர்கள் யாரும் இப்போதில்லை. எல்லோரும் செத்துவிட்டார்கள். நமக்கு விபரம் தெரிந்து இரண்டாம் தலைமுறைத் தலைவராக வந்து கொண்டிருக்கிற ஒரே தலைவர் கலைஞர்தான். இந்த நாடகத்திற்கு அவர் வருகை தந்தது எனக்குப் பெருமையாக உள்ளது''. (செ-இ)

புதிய
ஹெடோ.றைல் 'எம்'
40% எம். சி. பி. ஏ. மற்றும் சோடியம், பொட்டாசியம் ஆகிய உப்பு அடங்கிய களை கொல்லி.
பயிர்க் கொல்லிகளை விட்டு வைக்காமல் வேரோடொழிக்கும். உறுதியாக அதிக லாபம் தரும்.

விளைபொருள்களின் உறுதுணை நின்று காக்கும் ஹெடோறைல் 'எம்',
நெல், கரும்பு, சோளம், மற்றும் புற்றரைகளைப் பாதிக்கும் அகன்ற இலைக்களைகளையும், புதர்ச் செடிகளையும் செப்பமாகவும் சிக்கனமாகவும் ஒழித்துவிடும்.
பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள் ஹெடோறைல் 'எம்'.
நம்பிக்கையான விஷபமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள் !
மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர் : பேயர் ஜெர்மனி
இலங்கையில் தயாரிப்போர் : ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


P-9124

# பெரியவிளான் பலாத்கார வழக்கு: இளைஞருக்கு 4 வருடக் கடூழியம்!

(யாழ்ப்பாணம்)

எட்டு வயதுச் சிறுமியைப் பலாத்காரம் செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், எதிரிக்கு 4 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு, யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நடைபெற்றது.

ஜூரி சபையினர், எதிரி குற்றவாளியென ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கில் பெரியவிளானில் 1976 ஜூலை 18ந் தேதி எட்டு வயதுச் சிறுமியான தியாகராசா ரஞ்சினியைக் கற்பழித்தாகச் சூசை எட்வேட் அல்லது செல்லன் என்ற இளைஞன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி எம். திருநாவுக்கரசு, சட்டத்தரணி என். சுரேந்திரன் ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஜெயக்குமார் வழக்கை நடத்தினார்.

விசாரணையில் தியாகராசா ரஞ்சினி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவ தினம் ஞாபகமிருக்கிறது. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. நான் அன்று வீட்டில் இருந்தேன். அம்மாவும் இருந்தார். அப்போது எதிரி செல்லன் வந்தார். அவரை முன்பு தெரியும். அவர் எங்கள் வீட்டிற்குக் கிட்ட வசிப்பவர். எங்களுக்கு அவர் உறவினரில்லை. அம்மாவின் தாயார் மிளகாய்ச்செத்தல் தந்துவிட்டதாக எதிரி கூறினார். அம்மா என்னிடம் ஒரு கடுதாசிப் பையை, மிளகாய்ச் செத்தல் எடுத்துவரத் தந்தார். நான் எதிரி வீட்டை போனேன். எதிரியும் வந்தார். அங்கு வேறு ஒருவரும் இல்லை. வீட்டு முன்புறத்தில் நின்றேன். எதிரி வீட்டுக்குள் கையைப் பிடித்து "வா" என்று கூட்டிச் சென்றார்.

## பலாத்காரம் செய்தார்

"என்னைப் பாயில் படுக்கும்படி சொன்னார். அங்கு பாய் விரிக்கப்பட்டிருந்தது. அதன் பின் பலாத்காரம் செய்தார். பின் மிளகாய்ச்செத்தல் தந்து வேலிக்கு மேலால் என்னைத் தூக்கிவிட்டார். எதிரி சாரம் கட்டியிருந்தார். நான் வீட்டிற்குப் போய் அழுதேன். பின் நடந்தவற்றை அம்மாவிடம் சொன்னேன்.

நீதிபதி: "சத்தம் போட்டீரா?" - "குளறினேன். 'அம்மா அம்மா' என்றேன். வாயைப் பொத்திவிட்டார். அதன் பின் சத்தம் போடவில்லை."

## தாயார் சாட்சியம்

சிறுமியின் தாயாரான தியாகராசா தங்கலட்சுமி சாட்சியத்தில் கூறியதாவது:

"18ந் தேதி ஞாயிற்றுக்கிழமை வீட்டிலிருந்தேன். என்னுடன் பிள்ளைகளும் இருந்தனர். அப்போது எதிரி செல்லன் வந்தார். என் கணவர் எங்கே என்று கேட்டார். மூளாய்க்குப் போய்விட்டதாகக் கூறினேன். அக்கராயனிலிருந்து செத்தல்மிளகாய் அனுப்பியிருப்பதாகவும், வீட்டிலிருப்பதாகவும் எதிரி கூறினார். நான் மகள் ரஞ்சினியிடம் கடுதாசிப்பை ஒன்றைக் கொடுத்து அனுப்பினேன். எதிரிக்குப் பின்னால் மகள் போனார். சிறிது நேரம் பிள்ளையைக் காணவில்லை. 6 மணிக்குப் பின்னர் திரும்பிவந்தார். செத்தல்மிளகாய் கொண்டு அழுதழுது வந்தார். என்ன என்று கேட்டேன். பேசமுடியாமல் கொன்னைதட்டித் திக்குமுக்காடினார். பின் படுத்துவிட்டார். சிறிது நேரத்தில் எழுந்து, நடந்தவற்றைக் கூறினார். நான் அதிர்ச்சியடைந்துவிட்டேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை. என் கணவர் வரட்டுமெனக் காத்திருந்தேன். இரவு 10 மணிக்கு கணவன் வந்தார். நடந்தவற்றை அவரிடம் சொன்னேன். ஏன் உடன் பொலிஸ்நிலையத்திற்குப் போகவில்லை? எனக் கேட்டார்.

## உலகில் நடப்பதுதான்

"மறுநாள் காலை, பொலிஸுக்கும், ஆஸ்பத்திரிக்கும் போக ஆயத்தமானோம். இதனை எதிரியின் தாயாரும் தமையனும் அறிந்தார்கள். எதிரியின் அண்ணன் வீட்டுக்கு வந்து "இது உலகில் நடப்பதுதான். அங்கே இங்கே போகாமல் மருந்துசெய்யுங்கள்" என்றார். பொலிஸுக்குப் போனால் கொலைசெய்துவிடுவோம் எனப் பயமுறுத்தினர். அந்தப் பயத்தின் காரணமாக அன்று பொலிஸுக்குப் போகவில்லை. மறுநாட் காலை அளவெட்டிக்கு என் அண்ணன் வீட்டிற்குச் சென்றோம். அவர்களுடன் சமிளானை ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். டாக்டர் சங்கானை பொலிஸுக்குப் போகும்படி சொன்னார். நாங்கள் பொலிஸில் புகார்செய்தோம்.

## கொண்டாட்டம் இல்லை

"எனக்கு ஐந்து பிள்ளைகள் உண்டு. எதிரியின் ஆட்கள் எதற்கும் கத்தி கொண்டு பயமுறுத்துவார்கள். அவர்களுடன் எங்களுக்கு எவ்வித சொந்தமும் இல்லை. நாங்கள் அவர்களுடன் கொண்டாட்டம் வைப்பதில்லை.

மூன்று மாதக் குழந்தையை நான் குளிக்கவார்த்துக் கொண்டிருந்ததால் என் மகளை மிளகாய்ச்செத்தல் வாங்கிவர அனுப்பினேன் என்று எதிரியின் சட்டத்தரணிகளின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"நாங்கள் ஏழைகள். ஒருவரும் உதவியில்லை. அப்பகுதியில் நாங்கள் தனியே இருக்கிறோம் என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார். இப்பவும் பயந்துகொண்டுதான் இருக்கிறோம்" என்றும் அவர் கூறினார்.

## டாக்டர் சாட்சியம்

சட்ட வைத்திய அதிகாரி எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 1976ம் ஆண்டு ஜூலை மாதம் யாழ் ஆஸ்பத்திரியில் கடமையாற்றினேன். 21ந் தேதி ரஞ்சினியைப் பரிசோதனைசெய்தேன். முதல் நாள் செல்லன் என்பவர் பாயில் இடத்திப் பலாத்காரம் செய்ததாகக் கூறினார்."

எதிரியின் சட்டத்தரணி குறுக்குவிசாரணை செய்கையில் முதல்நாள் ஏற்பட்ட காயமென்று கூறினார் ஆகக் குறைந்தது 48 மணித்தியாலத்திற்குள் ஏற்பட்ட காயமென்றும் டாக்டர் கூறினார்.

டாக்டர் ஞானப்பிரகாசம் சாட்சியமளிக்கையில், 1976 ஜூலை 31ந் தேதி எதிரியைப் பரிசோதனை செய்ததாகவும், இடதுபக்கக் கழுத்தில் ஒரு கீறல் காயம் காணப்பட்டதாகவும், இக்காயம் 5 நாட்களுக்கு முன் ஏற்பட்டிருக்கலாமென்றும் கூறினார்.

எதிரியின் சட்டத்தரணி குறுக்குவிசாரணை செய்கையில் எதிரி தன் நகத்தால் கீறியபோதும் அந்தக் காயம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் வேறு காயங்கள் இல்லையென்றும் கூறினார்.

சார்ஜன்ட் துரைராஜா சாட்சியமளிக்கையில் எதிரியின் வீட்டிற்கு இரு தடவை சென்றதாகவும், எதிரி அங்கில்லையென்றும், எதிரி வீட்டில் சாரத்தையும், பையையும் கைப்பற்றியதாகவும், சாரத்தில் இரத்தக் கறை இருந்ததாகவும் கூறினார்.



## வாஷிங்டன் சுகிர்தரத்தினம் சொலமன்

கடந்த மாதம் 5ந் திகதி இறைவனடி எய்திய வாஷிங்டன் சுகிர்தரத்தினம் சொலமன் பிரபல பத்திரிகையாளரான வி. கி. சொலமன் மாஸ்டரின் மூத்த மகனுவர்.

இவர் யாழ். மாநகரசபையில் பிரதம மின்மானி வாசிப்பாளராகக் கடமையாற்றி இளைப்பாறியிருந்தார். 'பேபி' என சகல ஊழியர்களாலும் இனத்தவர்களாலும் செல்லமாக அழைக்கப்படும் இவர் பேயருக்கேற்ற குழந்தையுள்ளம் கொண்டவர். பழகுவதற்கு இனியவர். சமூக சேவையாளர்.

அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்போம்.

— நா. ச.

## ஆப். புதிய—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களே இந்த அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜெனரல் காதருக்கு பாதுகாப்பு அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவையில் பெரும்பான்மையோர் சோவியத் ஆதரவுள்ளவர்களே என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ)

## ...ர்வேலியில்—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தில் திருவாளர்கள் த. இராசேந்திரம், அ. பஞ்சாட்சரம், பே. தம்பையா, பண்டிதர் நீ. சி. முருகேசு மு. இரத்தினம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர் திரு. ம. க. நடராசா நன்றி தெரிவித்துப் பேசினார். தமிழ்மணி எஸ். கணேசசுந்தரனின் கதாப்பிரசங்கமும் இடம் பெற்றது. (ஈ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். திருவண்ணை நகர் அரசடி விநாயகர் ஆலயகும்பாபிஷேகத்தின் 5ம் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது. மாலை 6 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அதன்பின் விசேஷ நிகழ்ச்சிகளாக துர்க்கா துரந்தரி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும், ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தியின் பக்திப்பாடல்களும் இடம் பெறும். (ஈ)


நாகம்ஸ் (சுன்னாகம்) தினசரி 6-45, 10-00 விஜயகுமாரி நடித்த தாயில்லாக்குழந்தை

வெல்லி (சாவகச்சேரி) தினசரி 6-30, 9-45 நாகேஷ்-விஜயலலிதா நடித்த தேன் கிண்ணம்

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி - விஜயா கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692 (யாழ். நகர்) எம். ஜி. ஆர்.—அஞ்சலிதேவி மர்மயோகி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமாரி, நிர்மலா, அசோகன் நடித்த ஜானகி சபதம்

Regal (Jaffna) 2nd Crowded Week Daily 4-45, 7-00 and 9-30 p.m. TONY CURTIS ROGER MOORE in SPORTING CHANCE (Color) (Spy Film)

வெற்றிகரமான 2-வது மாதம் மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ நடித்த ஊருக்கு உழைப்பவன்

இன்று மட்டும் ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் இதுவரை யாழ். நகரில் திரையிடப்பட்ட பழைய படங்களின் வசூலை முறியடித்து சாதனை புரிந்துள்ள எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா நடித்த விக்கிரமாதித்தன் (புதிய பிரதி)

5ந் திகதி முதல் முத்துராமன், ஸ்ரீவித்யா, சந்திரகலா நடித்த காலங்களில் அவள் வசந்தம்

5-வது வெற்றி வாரம் ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா வாடைக்காற்று

சில தினங்கள் மட்டும் ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் எம். ஜி. ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த நல்லநேரம்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648 தினசரி 10-30, 3-30, 6-30, 9-45 4-வது கடைசி வாரம் இன்று மட்டும் கந்தன்கருணை ஈஸ்ட்மன் கலர்

கே. 6-ம், 7-ந் திகதி சனி, ஞாயிறு காலை 8-30 மணிக் காட்சி மட்டும் THE THREE FAT MEN

அடுத்த வெளியீடு மருதநாட்டு வீரன் (புதிய பிரதி)

Rio (Jaffna) Daily 4 Shows ALLAIN DELON Purple Noon Action (Color)

# தமிழீழப்புலிகளுக்கும் கூட்டணிக்கும் தொடர்பா?

[1-பக்க தொடர்ச்சி)

'நீங்கள் புலிகளுக்கு பயப்படுகிறீர்கள்' என்று சபையில் குரல்கள் எழுந்தன.

புலிகளோ, சிங்கங்களோ, சிறுத்தைகளோ, யானைகளோ அல்லது நரிகளோ நாமறியோம். அவை காட்டு விலங்குகள், காட்டினுள்ளேயே இருக்கட்டும். நண்பர்கள் வேண்டுமானால் காடுகளுள் சென்று அவற்றைத் தேடிப்பார்க்கலாம் என்றார் அமிர்.

அப்போது ஓர் உறுப்பினர் 'நீங்கள் அவர்களுக்குப் பயிற்சியளிக்கிறீர்கள்' என்றார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசுகையில்: திரு கனகரத்தினத்தை நான் துரோகி எனக் கூறியதாக உறுப்பினர் ஒருவர் கூறினார். உண்மை தான்.

நான் இப்போதும் அப்படியே தான்கூறுவேன். வாக்குறுதிக்கு மதிப்பளித்து நடக்கும் எவரும் வாக்குறுதியை மீறிய அவரை வேறு எப்பெயர்கொண்டும் அழைக்கமுடியாது. ஆனால், அவரை நான் அப்படி அழைத்ததற்காக, சிலவாரங்களின் பின்னர் நடைபெற்ற அவர்மீதான கொலை முயற்சிக்கு அதைக் காரணம் கூறிவிடமுடியாது. இச்சபையில் சில உறுப்பினர்களாவது தர்க்கவியல் படித்திருப்பார்கள். தர்க்க ரீதியாக இது தவறான வாதம் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். எனவே சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி வேண்டுமென்றே தவறான வாதத்துக்கு இடமளிக்கவேண்டாம் என்று சொன்ன திரு அமிர்தலிங்கம் திரு. கனகரத்தினத்துக்கு நேர்ந்த துரதிஷ்டமான சம்பவம்குறித்து தன்னைவிடவேறு யாரும் மேலான கவலைகொண்டிருக்கமுடியாதென்றும். உடனேயே தாம் ஆஸ்பத்திரியில் அவரை சென்று பார்த்ததாகவும் கூறியபோது சபையில் மீண்டும் கூச்சல் எழுந்தது.

### கனகரின் மகன்

அப்போது திரு அமிர்தலிங்கம்

திரு. கனகரத்தினத்தின் இச்செயலை வன்மையாகக் கண்டித்தவர்களுள் ஒருவர் அவரது மகன் என்றும் அவர் இப்போது குறித்த சில இயக்கங்களுடன் கொண்டிருந்த தொடர்புகளுக்காக நீதிமன்றில் வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறியவர், இச்செயலைச் செய்யும்படி அவரது இந்த மகனையோ அல்லது வேறு உறுப்பினர்களையோ நான் தூண்டினேன் என்று கூறமுடியுமா? என்று கேட்டார்.

இளைஞர்கள் அவர்கள் பாதையில் செல்கிறார்கள், எக்கட்சியிலும் நாம் பழிசுமத்த முடியாது இந்த நாட்டில் மாத்திரமல்ல உலகின் எல்லாப் பகுதிகளிலுமே இளைஞர் குழப்பங்கள் இருந்து தான் வருகின்றன.

1971ல் நாம் கண்கூடாகக் கண்டோம் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கெதிராக சிங்கள இளைஞர்கள் குழப்பத் விளைவித்தார்கள். அதைத் ஒத்ததாகத்தான் தமிழ் இளைஞர்களிலும் ஒரு பகுதியினர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்கு சந்தேகமில்லை என்றார்.

### இளைஞர்களை தூண்டுகிறீர்கள்

அச்சமயம் அகலவத்தை உறுப்பினர் திரு.மெரில் காரியவாசம் குறுக்கிட்டு

''நீங்கள் தமிழ் இளைஞர்களை தூண்டுகிறீர்கள்'' என்று சொல்லவும் திரு. அமிர்தலிங்கம்

''அப்போ 1971 கிளர்ச்சிக்கு நீங்கள் சிங்கள இளைஞர்களை தூண்டினீர்களா? என்று கேட்டார்.

அதற்கு திரு. காரியவாசம் "நீங்கள் தூண்டிவிட்ட பின்னர் உங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை'' என்றார்.

நீங்கள் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை விடுதலையாக்கினீர்கள். நீங்களே ஆரம்பத்தில் அவர்களைத் தூண்டிய படியால்தான் பின்னர் அவர்களை விடுதலை செய்தீர்கள்? என்று திரு. அமிர் கேட்கவும் அக்கூற்றை வரபஸ்பேறும்படி உறுப்பினர் எழுந்து நின்று குறுக்கிட்டனர். அச்சமயம் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது.

### உங்களுக்கு புரியவில்லை

நான் சொன்னது என்ன என்பது உங்களுக்கும் புரியவில்லை நாம் அப்படிச் சொன்னால் அது சரியா? என்றுதான் நான் கேட்கிறேனே தவிர நான் அப்படிக் கூறவில்லை.

ஆயுத பாணிகளாக பொலிசாருக்கு எதிராக அவர்கள் சண்டையிட்டார்கள், பல பொலிசாரைக் கொன்றார்கள். பொலிஸ் நிலையங்களைத் தாக்கினார்கள். அவர்களை நீங்கள் விடுதலை செய்தீர்கள். நீதியான முறையில் அவர்கள் தண்டிக்கப்படுவதை எதிர்த்து உங்கள் நடவடிக்கையை நாம் வரவேற்று ஆதரித்தோம்.

அவ்வாறேதான். சந்தேகத்துக்கிடமின்றி முற்றிலும் விரக்தியுற்ற நிலையில் தமிழ் இளைஞர்களிலும் ஒரு பகுதி இருக்கிறது

திரு அமிர்தலிங்கம் இப்படிக் கூறிக்கொண்டிருக்கையில் திரு. காரியவாசம் மீண்டும் குறுக்கிட்டு

நீங்கள் ஏன் அவர்களைக் கண்டிக்கக் கூடாது? என்று கேட்கவும் திரு. அமிர்தலிங்கம் இந்நாட்டில் பல கொலைகள் நிகழ்கின்றன. அவற்றையெல்லாம் கண்டித்து அரசியல் கட்சிகள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றனவா? இதன் அர்த்தம் என்ன? என்று கேட்டார்.

### நாம் மாத்திரம் ஏன் அறிக்கை விடவேண்டும்?

'முன்னர் பொலிசார் கொலைசெய்யப்பட்ட போது அதுபற்றி எந்த ஓர் அரசியல் கட்சியும் அறிக்கைவிடவில்லை ஏன் கூட்டணிமாத்திரம் அறிக்கைவிடவேண்டும்? இக்கொலையைச் செய்தவர் இவர் தான் என்று எவராவது ஒருவரையேனும் குறிப்பிட்டு நிரூபிக்க உங்களால் முடியுமா? நான் இதை ஒரு சவாலாக விடுக்கின்றேன்'' என்றும் திரு அமிர்தலிங்கம் மிகவும் ஆத்திரமுற்றவராக சபையில் கேட்டார்.

'உங்களிடம் அதற்கு அத்தாட்சி இல்லை!.

'புலிஇயக்கம் என்றுஓர் இயக்கம்தாமே இதற்குப் பொறுப்பு என்று பத்திரிகை ஒன்றில் கையெழுத்துமின்றி வெளியிடப்பட்டதை வைத்து......'' என்று திரு. அமிர்தலிங்கம் பேசிக்கொண்டிருக்கையில் மீண்டும் கூச்சல்கள் கிளம்பின. அவற்றின் மத்தியிலும் பேசிய திரு அமிர்தலிங்கம்

இக்கொலை தொடர்பாக ஐ. தே. க அறிக்கை விட்டதா? ஸ்ரீ. சு. க. அறிக்கை விட்டதா? ஏன் கூட்டணி மாத்திரம் அறிக்கைவிடவேண்டும்? என்று கேட்டார்.

அச்சமயம் உறுப்பினர் ஒருவர் எழுந்து ஆவேசத்தோடு குறுக்கிடவும் சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அவரை அமரும்படி செய்தார்.

அச்சமயம் திரு அமிர்தலிங்கம் கௌரவ உறுப்பினருக்காக நான் அனுதாபப்படுகிறேன்' அவரின் பரிதாபகரமான பேச்சுக்கு அனுதாபப் படுகிறேன் அவரால் முடிந்தது அதுதான் என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:

### பயமுறுத்தல்கள் பலிக்கமாட்டா

நாட்டில் பலகொலைகள் நடைபெறுகின்றன. அவற்றுக்கு எல்லாம் அறிக்கை விடுவது அல்ல அரசியல் கட்சியின் வேலை. இக்கொலையோடு தொடர்பு உள்ள எந்த தனி நபரையோ அல்லது தனிநபர் குழுக்களையோ கண்டுபிடித்து அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் அவர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவேண்டியவர்களே என்றவர் இத்தகைய பயமுறுத்தல்கள் எம்மிடம் பலிக்கமாட்டா என்றும் இவற்றை இச்சபை உறுப்பினர்களுக்கு இச்சபை வாயிலாக நாட்டுக்கும் சொல்லிவைக்க விரும்புகிறேன் என்றும் சொன்னார்.

இளைஞர்கள் ஒரு சாராரிடம் ஆழமான விரக்தி ஏற்பட்டிருப்பதில் சந்தேகமில்லை. இளைஞர்களைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கவே நாம் முயல்கிறோம். ஆனால் மன்னார் கொலைகளை யார் செய்தார்கள் என்பது எமக்குத் தெரியாது என்று சொன்ன திரு அமிர்தலிங்கம். எந்த நிலையிலாவது எமது எம். பிக்கள் மீதோ அல்லது எமது இயக்க உறுப்பினர்மீதோ பொறுப்புக்கள் உறுதிப்படுத்தப்படுமானால் அவற்றின் பலனை எதிர்நோக்கவும் ஏற்கவும் நாம்தயாராகவுள்ளோம். ஆனால் நான் மிகவும் வலியுறுத்திக் கூறுகிறேன்; காலஞ்சென்ற திரு. செல்வநாயகத்தினால் கட்டியெழுப்பப்பட்ட எமது கட்சி காந்தியக் கொள்கைகளையே கொண்டது. இதனால்தான் தந்தை செல்வாவின் முதலாவது நினைவுநாளில்கூட ஒரு தலைசிறந்த காந்தியவாதியான டாக்டர் திவாகரை நாம் இந்தியாவிலிருந்து அழைத்திருந்தோம்.

நிம்மதியற்ற மக்கள், இளைஞர்கள் காந்திய சிந்தனைகளையும், இம்மாதிரி பிரச்னைகளைக் காந்திய ரீதியில் அணுகும் முறைகளையும் அறிந்துகொள்வதற்காகவே நாம் இவரை அழைத்தோம் என்ற அமிர், நான் இங்கு இச்சமயத்தில் சொல்லவேண்டியவை இவ்வளவுதான் என்று கூறி அமர்ந்தார்.

இத்தனை நேரமும் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்த சபையில் திரு. அமிர்தலிங்கத்தையடுத்து பிரதமர் திரு. ஆர். பிரேமதாச பேச எழுந்ததும் அமைதி நிலவியது.

எதிர்க்கட்சித்தலைவர் கூறிய அனைத்தையும் தாம் ஏற்றுக்கொள்வதாகவும்; அவரது பேச்சில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை என்றும் தெரிவித்த திரு. பிரேமதாசா, 1971இல் தமது கட்சியினர் மீதும் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டனவென்றும், பின்னர் உண்மைநிலை சகலராலும் அறியப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

(ம)

---

ஒட்டுப் பலகை கூட்டுத்தாபன

# யாழ்.கிளை இம் மாதம் மூடப்படும்

## எம். பி., பொதுமக்கள் ஆட்சேபனை

(யாழ்ப்பாணம்)

ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையை இம்மாதம் 31-ம் திகதியிலிருந்து மூடி விடுவதென கூட்டுத்தாபனம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு வடபகுதி மக்களும் அரச திணைக்களங்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பாவனையாளர்கள் யாழ். எம். பிக்கு ஆட்சேப மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்துள்ளனர்.

இதை அடுத்து யாழ் எம். பி. ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனத் தலைவரிடம் இக்கிளையை மூடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார். யாழ். கச்சேரியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு மேலிடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

வட்டு எம். பி திரு. த. திருநாவுக்கரசும் இதுகுறித்து கூட்டுத்தாபனத்திடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

மரப்பலகைகள் மிகவும் தட்டுப்பாடான வேளையில் வடக்கில் ஒரே ஒரு ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபன விற்பனைக்கிளை மூடிவிடுவதால் பொதுமக்கள் மேலும் பல சிரமத்துக்குள்ளாவார்கள் என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

---

## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(சங்கானை)

சங்கானையில் சைக்கிள் திருட்டு அதிகரித்துள்ளது அண்மையில் தபாற்கந்தோருக்கருகாமையிலும் சலேசியார் கோவிலடியிலும் விலைமதிப்புள்ள இரு சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. இதுபற்றி சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (இ)

---

### மந்துவில் கொலை வழக்கு:

# 1-ம் எதிரிக்கு சுகவீனம் விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மந்துவில் கொலைவழக்கில், 1ம் எதிரிக்கு சுகவீனமாதலால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் எம் அப்துல் காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் மந்துவிலில் 75 மார்ச் 17 ம் திகதி பாலன் பொன்னன், சின்னப்பொடி செல்வராசா, பொன்னன் தங்கராசா, பொன்னன் முருகன் ஆகியோர் சின்னத்தம்பி கிட்டிணனை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சே வி. எஸ். சண்முகநாதன், சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆகியோர் ஆஜரானார்கள் அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் வழக்கை நடத்தினார்

நீதிபதிவிசாரணையை ஜூன் 14ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## புதிய...

[1-ம் பக்க தொடர்ச்சி]

இதன்பின் கொள்வனவு இலாகாவின் உதவிக் கமிஷனராகவும் பணியாற்றிய இவர் 1970ல் பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டார்

கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர் 1972ம் ஆண்டில் சட்டற்றெழில் இலாகாவின் சிரேஷ்ட உதவி டைரக்டராக நியமிக்கப்பட்டு பின் 1974ம் ஆண்டில் அரசவடிசாலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். இதன்பின் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உதவிச்செயலாளராக இருந்தார் இன்றுமுதல் யாழ்மாவட்ட அரசாங்க அதிபராக பதவியேற்கிறார்.

---

## மரண அறிவித்தல்

சண்டிலிப்பாய் இளைப்பாறிய (P. W. D.) ஓவசியர் அருணாசலம் கனகசபை காலமாகிவிட்டார். இவர் விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும் வியாகேஸ்வரன் (லண்டன்), வியாகேஸ்வரிஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜா (Suptd of Audit), நீலாம்பாள் ஆகியோரின் மாமனுமாவர். ஈமக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் சண்டிலிப்பாயில் நடைபெறும். உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 9211

---

## மரண அறிவித்தல்

### திருமதி. இ. மகேஸ்வரி

மயிலிட்டியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி இலங்கைநாயகம் காலமானார். இவர் கண்டி St. Anthony's College இளைப்பாறிய ஆசிரியர் திரு. இலங்கைநாயகத்தின் மனைவியும், திருமதி பவானி, பூபாலசிங்கம்(U K) மைதிலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி, பத்மினி யாழ். வளாகம் வட்டுக்கோட்டை, ஹொமாங்கினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், சுவாமிநாதன், சேதுகாவலர், சபாநாயகம், இளையதம்பி, திருமதி முத்துக்குமாரு, திருமதி ஆறுமுகம் ஆகியோரின் சகோதரியும் அருணின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 4 5-78 வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு மயிலிட்டியில் நடைபெறும்.

தகவல்

9214 இலங்கைநாயகம் குடும்பத்தினர்.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மேமாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram 'Eenaadu' Telephone 389 Registered as a Newspaper in SriLanka